# உட்படுத்தல் சார் கற்றல் செயற்பாடு: விசேட கல்வி மாணவர்கள் எவ்வாறு சகபாடிகளுடன் இடைத்தொடர்பை பேணுகிறார்கள்



தலைமை ஆசிரியர் "ஒரு செயற்பாட்டைச் செய்வதற்காக நண்பர்களின் வகுப்பிற்கு செல்வோம்" என்று சொன்னதும் பிள்ளைகள் பரவசமடைந்தனர். அவர்கள் விரைவாக வரிசையாகியதுடன் தரம் 2 வகுப்புக்கு அருகில் நிறுத்துவதற்காக புகையிரதம் போல புறப்பட்டார்கள்.

இது ஓர் பிரதான நகரத்திலுள்ள பிரபல்யமான பாடசாலையாகும். பாடசாலையின் விசேட கல்விப் பிரிவு இலகுவாக அணுகும் வகையில் பிரதான வாயிலின் அருகே உள்ள வகுப்பறையில் அமைந்துள்ளது. ஆற்றல் மிக்க இளம் பட்டதாரி ஆசிரியர்கள் இருவர் இப்பிரிவை மிகுந்த உற்சாகத்துடன் நடாத்துகின்றனர்.

"நாங்கள் பட்டதாரி ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டதுடன், விசேட கல்வி ஆசிரியர்களின் வெற்றிடமாகவிருந்த பணியிடங்களை பூர்த்தி செய்யுமாறு கல்வித் திணைக்களம் எங்களைக் கேட்டுக் கொண்டது. அது எங்களுக்கு சவாலானதாக அமைந்தது. எனினும், வலயக் கல்வி அலுவலகத்தில் அடிப்படைப் பயிற்சிகளைப் பெற்று பணியை ஆரம்பித்தோம். குறிப்பாக பணியை ஆரம்பித்த பின்னர், எங்களின் உற்சாகம் அதிகரித்தது. நாங்கள் சுய கற்றல், பரிசோதனை செய்தல் மற்றும் சிரேஷ்ட ஆசிரியர்களுடன் கலந்துரையாடல் மூலமாக எங்களது அறிவை மேம்படுத்திக் கொண்டோம்," என்று ஆசிரியர்கள் கலந்துரையாடலின் போது எம்மிடம் கூறினார்கள்.

அன்றைய தினம், அவர்கள் இணைந்த கற்றல் செயற்பாடொன்றை நுணுக்கமாகத் திட்டமிட்டிருந்தனர். இணைந்த கற்றல் செயற்பாடுகள் அனைத்து கற்பவர்களின் திறன்களைப் பொருட்படுத்தாமல் அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. அவர்கள் பெரும்பாலும் பல்வேறு கற்பித்தல் முறைமைகள் மற்றும் பொருட்களைப் பயன்படுத்தி கற்பிக்க திட்டமிட்டிருக்கிறார்கள். இத்தகைய பாடங்களின் நோக்கம், விசேட தேவைகள் உள்ள

பிள்ளைகள் தொடர்பிலான அணுகுமுறையை மாற்றுவதுடன், வழக்கமான வகுப்புகளில் தங்களது சகபாடிகளுடன் இணைந்து கற்க அனுமதிப்பதுமாகும்.



இது தரம் 2 வகுப்பு ஆசிரியரின் ஒத்துழைப்புடன் விசேட கல்வி ஆசிரியர்களால் நடாத்தப்பட்ட இணை கற்பித்தல் பாடமாகும். மாணவர்கள் ஒரே மாதிரியான குழு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்டதால், அவர்கள் உற்சாகமாக இருந்தனர். 10 விசேட கல்வி மாணவர்கள் ஆறு குழுக்களுக்குள் பிரிக்கப்பட்டனர், அவர்களில் ஒருவர் அல்லது இருவர் ஒவ்வொரு குழுவிற்கும் தலைமை தாங்கினர். கத்தரிக்கோல், பென்சில்கள், வண்ண பேனாக்கள் மற்றும் பசை போன்ற கைவினைப்பொருளுக்குத் தேவையான அனைத்தையும் உள்ளடக்கிய செயற்பாட்டுப் பொதிகளை ஆசிரியர்கள் அவர்களிடையே விநியோகித்தனர்.

விசேட கல்வி ஆசிரியர்கள், ஆசிரிய மேசையில் வண்ணமயமான காகித மரங்கள் மற்றும் செடிகள் கொண்ட பண்ணையை தயார் செய்திருந்தனர். அந்த பண்ணைக்கு மாணவர்கள் கால்நடைகளை உருவாக்க வேண்டும். ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு கால்நடை மாதிரி வழங்கப்பட்டது, மேலும் அவர்கள் மாதிரியின் படி அதிகளவான விலங்குகளை உருவாக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. விசேட கல்வி மாணவர்கள் கைவினைத் தயாரிப்பு நடவடிக்கைக்கு தலைமை தாங்க வேண்டும்.

விசேட கல்விப் பிரிவின் மாணவர்கள் ஏற்கனவே தங்களது வகுப்பில் இந்த பாடத்திற்கான செயற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர். அவர்களது வகுப்பில் ஒரு மேசையில் உள்ள காகிதப் பண்ணை காகித விலங்குகளால் நிறைந்திருந்தது. எனவே, அவர்கள் நம்பிக்கையுடன் தலைமையேற்று செயற்பாடுகளை ஆரம்பித்தனர். மற்றைய மாணவர்களும் தங்களின் உபகரணங்களை எடுத்துக் கொண்டு அவர்களைப் பின்தொடர்ந்தனர். விசேட கல்வி மாணவர்கள் உருவாக்கத்தை நிறைவு செய்த நேரத்தில், மற்றைய மாணவர்களும் அவர்களிடமிருந்து கைவினைப்பணியைக் கற்றுக்கொண்டனர். அரை மணி நேரத்திற்குள், பிள்ளைகள் ஏராளமான பசுக்கள், ஆடுகள், முயல்கள், கோழிகள், வாத்துகள் மற்றும் முயல்களை உருவாக்கினர்.

விசேட கல்வி மாணவர்கள் கைவினைப்பொருளை எவ்வாறு தயாரிப்பது என்பது குறித்த செயல்விளக்கத்தை மேற்கொண்டு காட்டினர். மற்றைய மாணவர்களின் வினாக்களுக்கு பதிலளித்ததுடன் அவர்களுக்கும் உதவினர். இது ஓர் இலகுவான கைவினைப்பணியாக இருந்தாலும், அதிகளவான கற்றல் இடம்பெற்றது. அவர்கள் கைவினைப்பொருளை மட்டுமின்றி, தங்கள் சகபாடிகள் அனைவருடனும் எவ்வாறு இடைத்தொடர்புகொள்வது என்பதையும் கற்றுக்கொண்டனர்.

செவிமடுத்தல் இயலாமையுள்ள மாணவர்களும் கற்கையில் பங்கேற்றனர். செவிமடுத்தல் இயலாமையுள்ள மாணவர் ஒருவர் தரம் 2 வகுப்பில் இணைக்கப்பட்டுள்ளார்.

”அவர் தனது விசேட கல்வி ஆசிரியர்களுடன் சைகை மொழியைப் பயன்படுத்துகிறார், ஆனால் வகுப்பில் உதட்டு அசைவை அவதானிக்க முயற்சிக்கிறார். அவர் மற்றைய மாணவர்களுடனான இடைத்தொடர்புகளிலிருந்து அதிகமாக கற்றுக்கொள்கிறார். அவர்கள் ஒருவருக்கொருவர் உதவுகிறார்கள்” என்று தரம் 2 இனுடைய வகுப்பாசிரியர் கூறினார்.

பாடத்தின் நிறைவில், பிள்ளைகள் மகிழ்ச்சியுடன் தங்களது கைவினைப்பணி விலங்குகளை உயர்த்தி, அவற்றின் பெயர்களைச் சொன்னார்கள். அதன் பிறகு, அவர்கள் தங்களின் கால்நடைகளைக் கொண்டு வந்து ஆசிரியரின் மேசையில் செய்யப்பட்ட பண்ணையில் வைத்தார்கள். அனைத்து மாணவர்களும் பாடத்தை இரசித்தபடி மகிழ்ச்சியாக இருந்தனர்.

விசேட கல்விப் பிரிவில் டவுன்ஸ் குறைபாடு, செவிமடுத்தல் இயலாமை, ADHD (அதீத செயற்பாட்டுடன் கூடிய அவதானக் குறைபாடு) மற்றும் பல இயலாமைகளையுடைய மாணவர்கள் உள்ளனர். ஆசிரியர்கள் அவர்களுக்கான கற்கைகளைத் தனித்தனியாக திட்டமிடுகிறார்கள். விசேட கல்வி ஆசிரியர்களின் கண்காணிப்பின் கீழ் பல மாணவர்கள் பொது வகுப்புகளில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளனர்.



”இது பிரபல்யமான பாடசாலை என்பதால், வகுப்புகளில் மாணவர்கள் அதிகமாக உள்ளனர். குழு நடவடிக்கைகளுக்கு வகுப்பறைகளில் இடம் சவாலானதாக உள்ளது. மேலும், விசேட தேவையுடைய மாணவர்களின் உட்படுத்தல் கற்கையில் கவனம் செலுத்துவதற்கு ஆசிரியருக்கு நேரமும் சுதந்திரமும் இருப்பதில்லை” என தரம் 2 வகுப்பாசிரியர் சுட்டிக்காட்டினார்.

”நாங்கள் செயற்பாட்டினால் மகிழ்ச்சியடைந்தோம். எங்களின் புதிய நண்பர் கைவினைப்பொருளை உருவாக்கினார், நாங்கள் அவரைப் பின்பற்றி செய்தோம். அதை எவ்வாறு செய்வது என்று அவர் எங்களுக்கு விளக்கினார்” என்று தரம் 2 மாணவர்களில் ஒருவர் கூறினார்.

இலங்கையின் ஆரம்ப வகுப்பறைகள் யாவும் ஒற்றை வகுப்பாசிரியர்களை கொண்டுள்ளது. உதவி ஆசிரியர் இருந்தால், விசேட தேவைகள் உள்ள மாணவர்களைக் கையாள்வது வகுப்பாசிரியருக்கு இலகுவானதாக இருக்கும். இருப்பினும், இந்தப் பாடசாலை உட்படுத்தல் கல்வியை ஊக்குவிக்க முயற்சிப்பதுடன், இணைந்த கற்றல் செயற்பாடுகள் அதன் பிரதானமான பகுதியாகும்.

நாம் அவதானித்த அத்தகைய இணைந்த கற்றல் செயற்பாடு, எந்தப் பாடப் பகுதியிலும் கற்பிக்கப்படலாம், அவை எல்லா வயதினரான மாணவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் மாற்றியமைக்கப்படலாம் என்பதைக் சுட்டிக்காட்டியது. அனைத்து மாணவர்களும் தங்கள் சகாக்களுடன் சேர்ந்து கற்பதன் மூலமாக பயனடைவதாக தோன்றியது. மேலும், உட்படுத்தல் கல்வி ஒரே மாதிரியான உள எண்ணங்களை உடைத்து புரிந்துணர்வையும் ஏற்றுக்கொள்ளலையும் மேம்படுத்த உதவுகின்றன. நிஜ உலகில், இயலாமை உள்ளவர்கள் நாளாந்த அடிப்படையில் சாதாரணமானவர்களுடன் பணியாற்றுவதனூடாக இடைத்தொடர்பு கொள்கிறார்கள். இணைந்த கற்றல் செயற்பாடு மாணவர்கள் இந்த உலகில் வெற்றி பெறத் தேவையான திறன்களையும் நம்பிக்கையையும் வளர்த்துக் கொள்ள இவை உதவுகின்றன.